கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. சுற்றுநிருப இல: 2015/16 | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date 05-12-2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்வி அலுவலர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
வடக்கு மாகாணம்.

## பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சீருடைக்குப் பதிலாக பரிசுக் கூப்பன்களை வழங்குதல்

மத்திய கல்வி அமைச்சின் 26/2015 இலக்க, 28.11.2015 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக,

1. வடக்கு மாகாணப் பாடசாலைகளின் மூன்றாந் தவணை முடிவுத் திகதியான 05.12.2015ஆம் திகதிக்கு முன்னர் சீருடைக்கான பரிசுக் கூப்பன்கள் (வவுச்சர்கள்) அதிபர்களினால் சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2. சீருடை வழங்குவதற்காக, விற்பனையாளர் பெயர் விபரம் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றுடன், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க புடவை நிலையங்களும் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும். இதில், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கூட்டுறவு புடவை நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

3. இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட வர்த்தக நிலையங்களின் பெயர் விபரங்கள் அதிபர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அதிபர்கள் மாணவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன், 31.01.2016 இற்கு முன்னதாக துணிகளைப் பெற்றுக்கொள்வதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. துணிகளைக் கொள்வனவு செய்தபின் வழங்கப்படும் பற்றுச்சீட்டினை மாணவர்களிடமிருந்து வகுப்பாசிரியர்கள் பெற்றுக்கொண்டு அவற்றை வகுப்பாசிரியர்கள் தங்கள் பொறுப்பில் கோவைப்படுத்தி பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

5. பொது விடயங்கள்:
   i. மீதமாகும் கூப்பன்கள் அதிபர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். (படிவம் 5)
   ii. அதிபர்கள், தாம் பெற்றுக்கொள்ளும் மிகுதியான கூப்பன்களை வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைத்தல் வேண்டும். (படிவம் 6)
   iii. வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கிடைத்த அறிக்கை தொடர்பாக பரீட்சிப்புக் குழு அமைத்து எழுமாற்றாகப் பரீட்சிப்பினை மேற்கொள்ளல் வேண்டும்.
   iv. வலயக் கல்விப் பணமனை, எஞ்சிய கூப்பன்கள் தொடர்பான அறிக்கையினைத் தயாரித்து (படிவம் 7) மத்திய கல்வி அமைச்சிற்கு கூப்பன்களுடன் அனுப்பி வைப்பதுடன், இதன் பிரதியொன்றினை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கும் அனுப்புதல் வேண்டும்.



செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021-2220794

6. மேற்பார்வை:

    i. பாடசாலைகள் கூப்பன்கள் விநியோகம் நிறைவுபெற்றதும் 2016 ஜனவரி மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதிக்குள் சகல செயற்பாடுகளும் நிறைவு செய்திருப்பதுடன், அவற்றுக்குரிய கோவைகள் யாவும் மேற்பார்வை செய்வதற்கேற்ற வகையில் பேணப்படுதல் வேண்டும். இதனை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மேற்பார்வைக் குழு 2016 ஜனவரி 14 – 20 வரையான காலப்பகுதியில் மேற்பார்வை செய்யும்.

    ii. வலயக் கல்வி அலுவலகங்கள் எஞ்சிய கூப்பன்களடங்கிய அறிக்கையினை மத்திய கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்து, அவ்வறிக்கையின் பிரதியொன்றை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

**இ. இரவீந்திரன்**
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

பிரதி:

1. கௌரவ.கல்வி அமைச்சர்,
   வடக்குமாகாணம்.

2. கௌரவ.விவசாய அமைச்சர்,
   வடக்கு மாகாணம்.

3. பிரதம செயலாளர்,
   வடக்கு மாகாணம்.